DMC CUM JM COURT KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **S.T.C.No. 79 /2023, Mangalamedu P.S. PW -6.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஆண்டவர் | National | : | இந்தியன் |
| Father/ Husband Name | : | பிச்சமுத்து | Calling | : | உதவி ஆய்வாளர் |
| Village | : | பெரம்பலூர் காவல் நிலையம் | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 59 /2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 14.05.2025. | | | | | |

A1 to A5 Present. A6 absent u/s 317 C.r.P.C filed and allowed.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் தற்போது பெரம்பலூர் காவல் நிலையத்தில் உதவிஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 29.01.2023 ம் வருடம் மாலை 19.30 மணியளவில் போக்குவரத்து அமைச்சர் சிவசங்கர் வருகை முன்னிட்டு நீர்வளத்துறை சம்மபந்தமாக லப்பைக்குடிக்காடு பேரூராட்சி அலுவலகம் முன்பு 10 நபர்கள் கருப்பு கொடி காட்டியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டது. 1. அக்தர் அலி, 2. அலிராஜா, 3. சாகுல்ஹமீது, 4. ஷேக்ரஷீத், 5. தாவூத் இஸ்மான், 6. முகமது முஸ்தபா, 7. முகமது அசாரூதீன், 8. முகமது அலி, 9. கட்டப்பிள்ளை (எ) பைசல், 10. ஷாஜகானி, மேற்படி எதிரிகள் மீது மங்களமேடு காவல் நிலைய குற்ற எண். 47/2023 இதச சட்டப்பிரவுகள் 143,341,ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

2. வழக்கு மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திருமதி,. செந்தமிழ்செல்வி அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** :–

1. நான் கொடுத்த புகாரில் நான் பாதுகாவலில் இருந்தபோது பொதுமக்களோ வாகன ஓட்டிகளோ எதிரிகள் தங்கள் போக்குவரத்துக்கு இடையூறாக மறித்துக்கொண்டிருந்ததாக புகார் எதுவும் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். லப்பைக்குடிக்காடு போரூராட்சிக்கு குறிப்பிட்ட பகுதியில் எவ்வித ஆர்பாட்டமோ, கூட்டமோ நடைபெற முன் அனுமதி பெறவேண்டும் என்று மாவட்ட நீதிபதியோ, அல்லது மாவட்ட காவல் கண்காணிப்பாளரோ பிரிவு 30–ன் கீழ் உத்தரவு

ஏதேனும் பிற்பபித்திருந்தார்களா என்றால் இல்லை. எதிரிகளை எனக்கு இதற்கு முன்பு தெரியாது என்றால் சரிதான். என்னை உதவி ஆய்வாளர் விசாரிக்கும்போது ஆஜர் எதிரிகளை இன்னார் மூலம் எதிரிகளை அடையாளம் தெரிந்து கொண்டேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் நான் சொல்வதுபோல் எந்தவிதமான குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றாலும், மேல் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதிற்கிணங்க அவர்கள் மீது தவறான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUM COURT, KUNNAM